# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# முதல் பத்து

## ஆறாம் திருவாய்மொழி - பரிவதில்
## 'எம்பெருமான் எளிதாக ஆராதிக்கத் தக்கவன்' என்று உபதேசித்தல்

** பரிவதில் ஈசனைப் பாடி *
விரிவது மேவல் உறுவீர்! **
பிரி வகை இன்றி நன்னீர் தூய் *
புரிவதுவும் புகை பூவே 1

மது வார் தண்ணந்துழாயான் *
முது வேத முதல்வனுக்கு **
எது ஏது? என் பணி? என்னாது *
அதுவே ஆட்செய்யும் ஈடே 2

ஈடும் எடுப்பும் இல் ஈசன் *
மாடு விடாது என் மனனே **
பாடும் என் நா அவன் பாடல் *
ஆடும் என் அங்கம் அணங்கே 3

அணங்கு என ஆடும் என் அங்கம் *
வணங்கி வழிபடும் ஈசன் **
பிணங்கி அமரர் பிதற்றும் *
குணங்கெழு கொள்கையினானே 4

கொள்கை கொளாமை இலாதான் *
எள்கல் இராகம் இலாதான் **
விள்கை விள்ளாமை விரும்பி *
உள் கலந்தார்க்கு ஓர் அமுதே 5

அமுதம் அமரர்கட்கு ஈந்த *
நிமிர் சுடர் ஆழி நெடுமால் **
அமுதிலும் ஆற்ற இனியன் *
நிமிர் திரை நீள் கடலானே 6

நீள் கடல் சூழ் இலங்கைக் கோன் *
தோள்கள் தலை துணி செய்தான் **
தாள்கள் தலையில் வணங்கி *
நாள் கடலைக் கழிமினே 7

கழிமின் தொண்டீர்கள்! கழித்து *
தொழுமின் அவனைத் தொழுதால் **
வழி நின்ற வல்வினை மாள்வித்து *
அழிவின்றி ஆக்கம் தருமே 8

தரும அரும் பயனாய *
திருமகளார் தனிக் கேள்வன் **
பெருமை உடைய பிரானார் *
இருமை வினை கடிவாரே 9

கடிவார் தீய வினைகள் *
நொடி ஆரும் அளவைக் கண் **
கொடியா அடு புள் உயர்த்த *
வடிவார் மாதவனாரே 10

** மாதவன் பால் சடகோபன் *
தீது அவம் இன்றி உரைத்த **
ஏதம் இல் ஆயிரத்து இப்பத்து *
ஓத வல்லார் பிறவாரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---